**பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிலையத்தில் (BIDTI) இராஜதந்திரம் & உலக விவகாரங்கள் தொடர்பான 21 ஆவது டிப்ளோமாச் சான்றிதழ் கற்கை நெறியை இந்திய உயர் ஸ்தானிகர் ஆரம்பித்து வைக்கிறார்**

***'Sabka Saath, Sabka Vikas, Sabka Vishwas'***
**அனைவருடனும் ஒற்றுமை, அனைவருக்கும் அபிவிருத்தி**

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிலையத்தில் (BIDTI) இராஜதந்திரம் & உலக விவகாரங்கள் தொடர்பான 21 ஆவது டிப்ளோமாச் சான்றிதழ் கற்கை நெறியை இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்கள் இன்று ஆரம்பித்து வைத்தார். பிரதிநிதி பமிலா டீன், பணிப்பாளர் நாயகம், BIDTI; திருமதி. தமயந்தி ராஜபக்ச, பணிப்பாளர் நாயகம் கிழக்காசியா, தெற்காசிய மற்றும் ஓசியானியாப் பிரிவு, இலங்கை வெளி விவகார அமைச்சு; கற்கைப் பீட உறுப்பினர்கள்; & BIDTI மாணவர்கள் பிரசன்னமாக இருந்தனர். இந்தியாவில் பிரதம மந்திரி நரேந்திர மோடி மீளவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், உயர் ஸ்தானிகர் ஆற்றும் முதலாவது பகிரங்க உரை இதுவாகும். உயர் ஸ்தானிகர் தேசிய பாதுகாப்பு தொடர்பில் விசேட வலியுறுத்தலுடன் பேசியதுடன் இந்திய-இலங்கை உறவுகள் தொடர்பாக பல்வேறு அம்சங்கள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார். உயர் ஸ்தானிகர் பின்வரும் பரந்த விடயங்களைக் குறிப்பிட்டார்:

- இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் பிரதம மந்திரி மோடி இந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது. அவரது மீளத் தேர்ந்தெடுத்தலின் பின்னர் பிரதம மந்திரி மோடியின் முதலாவது வெளிநாட்டுப் பயணத்தின் ஒரு பகுதியாக இது இருக்கும். ஏப்பிரல் 21 தாக்குதல்களுக்குப் பின்னர். இலங்கை மக்களுக்கு இந்திய மக்களிடமிருந்து ஒற்றுமை மற்றும் நம்பிக்கை என்பவற்றின் ஒரு செய்தியை அவர் சுமந்து வருவார்.

- பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம் என்பன மனித நேயத்திற்கு கூட்டாக ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. இலங்கையிலான அண்மைய தாக்குதல்கள், இலங்கைக்கு மட்டும் எதிரானவையல்ல. உலகின் எப்பகுதியிலுமான பயங்கரவாதம் முழு மனிதநேயத்தினதும் உள்ளுணர்வைத் தாக்குகிறது; நாங்கள் ஒன்று எனும் மனித உணர்வைச் சிதைக்கிறது. பகைமையுணர்வுடனான ஜிகாதிச் சித்தாந்தம் பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் உலக அமைதிக்கு ஓர் அச்சுறுத்தலாக உள்ளதினால், அது தனிமைப்படுத்தப்பட்டு இல்லாதொழிக்கப்படல் வேண்டும். இலங்கைக்கு தேவைப்படின், இது தொடர்பிலான அனைத்து சாத்தியமான உதவிகளையும் பிரதம மந்திரி மோடி அளித்துள்ளார்.

- பதவியேற்பு வைபவத்தின் பின்னர் பிரதம மந்திரி மோடி அவர்களின் முதலாவது நாள், இலங்கை உட்பட அயல்நாட்டிலிருந்தான தலைவர்கள் மற்றும் தூரத்து அயலவர்களைச் சந்திப்பதற்குமாக அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. தனது அயலவர்களுடனான விசேட உறவுகளுக்கு இந்தியா முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதைப் பிரதிபலிப்பதாக அது அமைந்திருந்தது.

- இலங்கையின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு இந்தியா எப்பொழுதும் முதலில் பதிலளிப்பவராக உள்ளது. அது வெள்ளமோ அல்லது வரட்சியாகவோ இருக்கட்டும், ஆட்கள் மற்றும் பொருட்களுடன் இந்தியாவே முதலில் பதிலளிப்பவராக உள்ளது. இந்தியா மக்களிடமிருந்து முழுமையான நன்கொடைகளாக, நாடு முழுவதிலும் மக்கள் நலன் சார்ந்த பல அபிவிருத்திச் செயல்திட்டங்களை இந்தியா பூர்த்தி செய்துள்ளது.

• கடந்த ஐந்து வருடங்களில் இந்திய-இலங்கை உறவுகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளது. பிரதம மந்திரி மோடி அவர்கள், மார்ச் 2015 இல், தீவுக்கான அவரது வரலாற்று ரீதியான விஜயத்துடன், 28 வருட கால இடைவெளியின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த முதலாவது பிரதம மந்திரியாக வந்தார். சர்வதேச வெசாக் தின கொண்டாட்டங்களுக்கான பிரதம விருந்தினராக மே 2017 இல் அவர் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்தியாவின் சமீபத்தைய தேர்தல்களில் பிரதம மந்திரி மோடிக்கான தெளிவான ஆணை அரசாங்கக் கொள்கைகளின் தொடர்ச்சிக்கான ஆதரவின் ஒரு பிரதிபலிப்பாகும். இந்தக் கொள்கைகளின் தொடர்ச்சி மற்றும் மேலும் வலுப்படுத்துதல் என்பனவும் கூட இலங்கையின் நலன்களிற் கானவையாகும்.

• இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய குறிக்கோள் அதன் 1.3 பில்லியன் தொகை மக்களின் இடர்காப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் உண்மையான அபிவிருத்தி அபிலாசைகளைத் தீர்ப்பதுமாகும். இந்தியாவின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் அதேவேளை, இந்தியா தனியே தன்னலம் சார்ந்து முன்னிறுத்தப்படவில்லை. இந்தியா எப்பொழுதும் அபிவிருத்தி வெற்றிகளைப் பகிர்ந்து கொள்வதை நம்புகின்றது. ஒன்றிணைந்து வளர்ச்சி காண்பதென்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடாக உள்ளது. பிரதம மந்திரி மோடி கூறுமாற் போல், பிராந்தியத்திலுள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்பதைக் குறிக்கும் வகையிலாக 'சாகர்' (**SAGAR- Security and Growth for All in the Region**) எனும் பதத்திற்கு ஏற்ப இந்து சமுத்திரத்தின் எதிர்காலம் அமைவதை இந்தியா வேண்டுகிறது.

• பிராந்தியம் மற்றும் உலகம் என்பன பெருமளவில் குழப்பகரமாக இருக்கையில், தனிப்பட்ட நாடுகள் அமைதியானவையாக, பாதுகாப்பு மற்றும் சுபீட்சமானவையாக தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது. உலகம் இன்று அதிகளவில் இடைத் தொடர்புபட்டதாக உள்ளது. மற்றவரது துன்பத்தை அவரது சொந்தப் பிரச்சினை என நாங்கள் விலகிவிட முடியாது; அவர்களதைப் போன்றே அது எங்களினதும் பிரச்சினையாகும். உலக அமைதி மற்றும் கூட்டு ஸ்திரத்தன்மை என்பவற்றைப் பேணுவது எங்களது தனிப்பட்ட மற்றும் கூட்டு நலன்களிலுள்ளது.

• இணையத்தளமும் மற்றும் இணையவெளியும் நாங்கள் சிந்திக்கும் மற்றும் செயற்படும் விதங்களை புரட்சிகரமாக மாற்றியமைத்துள்ளன. எண்ணிம வயது, தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகம் என்பன மனிதத்துவங்களை ஒன்றிணைத்துள்ள அதேவேளை, அது பகைமை மற்றும் சகிப்புத்தன்மையின்மை என்பவற்றை பரப்புவதற்கான ஒரு ஆற்றல் கொண்ட ஆயுதமாகவும் வந்துள்ளது. தனிப்பட்டவர்களின் உண்மையான இருப்பிடங்களைக் கருத்திற் கொள்ளாது, எண்ணங்களும் மற்றும் சித்தாந்தங்களும் காலங்களைக் கடந்து செல்லும் அடிப்படையில், எல்லைகளையும் தாண்டிப் பயணிக்கின்றன.

• அந்நியப்படுத்தப்படல், தனித் தொகுதியாக்கப்படல் மற்றும் அடையாளங்களின் அதிகாரப்படிமுறை பகைமை மற்றும் வன்முறை என்பவை வளர்வதற்கான வளமான அடிப்படையை அளிக்கின்றன. ஒன்றுபட்டிருத்தல் எனும் அடித்தளமொன்றில் மட்டுமே அன்பும் சகிப்புத்தன்மையும் செழுமையுற முடியும். அபிவிருத்தி நோக்கிய அதன் பயணத்தில் ஒவ்வொருவரையும் தன்னுடன் கூட்டிச் செல்வதை இந்தியா நம்புகின்றது. பன்மைத்துவம் கூடிக் கொண்டாடி மகிழ்வதற்கு அழைக்கிறதேயன்றி கொடுஞ்சமர் புரிவதற்கல்ல.

வைபவத்தின் போது உயர் ஸ்தானிகர் BIDTI இற்கு சில நூல்களையும் அன்பளிப்பு செய்தார்.